KAALAI KATHIR 04 AUG 09

காலைக்கதிர் 4.8.2009

## ஆன்மிகம் அறிவோமா

# உறவுகளை தேர்ந்தெடுப்பது எப்படி?



மனிதன், தனக்குள் ஒரு முழுமையை உணராத போது அந்தக் குறையை உறவுகள் மூலம் இட்டு நிரப்ப எண்ணு கிறான். தனக்குள் இருக்கும் எதிர்பார்ப் புகள் அந்த உறவின் மூலம் நிறை வேறாத போது தான் ஏமாந்து போன தாய் ஏங்குகிறான். மனிதர்களுக்கு இருக் கும் எதிர்பார்ப்புகளின் அளவைப் பாருங்கள். அதை நிறைவேற்றுவது இன்னொரு மனித ருக்கு சாத்தியமே இல்லை.

நீங்கள் கடவுளையே கல்யாணம் செய்து கொண்டால் கூட, கொஞ்ச காலத்தில் அவர் உங்களைக் கைவிட்டு விட்டதாகக் குறைபட்டுக் கொள்வீர்கள். அந்த அளவுக்கு, நிறைவேற்றவே முடியாத எதிர்பார்ப்புகள் மனிதர்களுக்கு உண்டு. ஆனால் அந்த எதிர்ப்பார்ப்புகளுக்கு எது மூலமாகத் திகழ்கிறது என்பதைப் புரிந்துக்கொண்டால், அற்புதமான உறவை உங்களால் உருவாக்க முடியும்.

இந்த உலகில் வேறெங்கும் நடக்கிற மோதல்களை விடவும் வீட்டின் நான்கு சுவர்களுக்குள் நடக்கிற மோதல் கள் தான் அதிகம். ஒரே விஷயம் என்னவென்றால் வீட் டுக்குள் குண்டுகள் வீசிக்கொள்வதில்லை. எனவே, உங்க ளுக்கு அது கேட்பதில்லை. ஆனால், மௌனத் தாக்குதல் கள் எப்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

உங்கள் வாழ்க்கையென்பது மகிழ்ச்சியைத் தேடுகிற பயணமாக இல்லாமல், மகிழ்ச்சியின் வெளிப்பாடாக இருக்குமானால், உங்கள் உறவுகள் இயல்பாகவே அற்புதமாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியின் வெளிப் பாடாக இருக்கும்போது மற்றவர்களின் எதிர்பார்ப்பு களை ஈடுசெய்கிற கோமாளித்தனம் இருக்காது. எப்படி யும் அவர்கள் உங்களுடன் இருக்க விரும்புவார்கள். நீங்கள் அவர்களை கசக்கிப் பிழிந்து அதன் மூலம் மகிழ்ச்சி பெற விரும்பினால் அவர்கள் உங்களிட மிருந்து விலக முயல்வார்கள். மகிழ்ச்சியின் தேடல் என்ற நிலையிலிருந்து மகிழ்ச்சியின் வெளிப்பாடு என்ற நிலைக்கு உங்கள் வாழ்க்கையை மாற்ற வேண்டும்.

-ஜக்கி வாசுதேவ்.